**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**எம்.சி.ஓ.பி.எண் 84/2021**
**நாள் 21/11/2025 வெள்ளிக்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – பாலகிருஷ்ணய்யா (PW1) | த/பெயர் – பால வெங்கடேஷ்வர்லு |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

**முதல் விசாரணை–**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். இவ்வழக்கு குறித்த விவரங்கள் அனைத்தும் பிரமான வாக்குமூலத்தின் வாயிலாக கூறியுள்ளேன். மனுதாரர்தரப்பில் மேலும் சான்றாவணங்கள் கீழ்க்கண்டவாறு குறியீடு செய்யப்படுகிறது.

1. (1). முதல் தகவல் அறிக்கை நகல் **ம.சா ஆ 1** ஆகவும்,

(2). 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்று நகல் **ம.சா ஆ 2** ஆகவும்,

(3). 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு சான்று நகல் **ம.சா ஆ 3** ஆகவும்,

(4). 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநரின் ஓட்டுநர் உாிமம் நகல் **ம.சா ஆ 4** ஆகவும்,

(5). மருத்துவ விடுவிப்பு அறிக்கை நகல் **ம.சா ஆ 5** ஆகவும்,

(6). மருத்துவ ரசீதுகள் அசல் **ம.சா ஆ 6** ஆகவும்,

(7). பயண செலவு ரசீதுகள் அசல் **ம.சா ஆ 7** ஆகவும்,

(8). கதிரியக்கபடம் **ம.சா ஆ 8** ஆகவும்,

(9). மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் **ம.சா ஆ 9** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மனு படி தீர்ப்பாக வேண்டுகிறேன். (ம.சா ஆ 7 பயண செலவு ரசீதுகள் மருத்துவ பயணத்திற்கான ரசீதுகளாக இருக்க முடியாது என்று 2ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார் அவருடைய ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது).

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

1. விபத்து எப்போது, எங்கு நடந்தது என்றால் சூலுர்பேட்டையில் உள்ள அங்காலம்மன் கோயில் ஆர்ச் அருகே 09.03.2020 தேதியன்று நான் வேலை முடித்துவிட்டு என்னுடைய இருசக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தபோது தவறான திசையில் இருந்து வந்த பேருந்து மோதி விபத்து ஏற்பட்டது. விபத்து நடந்தவுடன் எந்த மருத்தவமனைக்கு சென்றேன் என்றால் சூலுர்பேட்டையில் உள்ள சக்கரபாணி மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு முதலுதவி சிகிச்சை செய்யப்பட்டது. அதன் பின்னர் நெல்லூரில் உள்ள நாராயணா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். எத்தனை நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் 09.03.2020 முதல் 17.03.2020 தேதிவரை சிகிச்சை பெற்றேன்.

2. விபத்து குறித்து காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார்கள் என்றால் 11.03.2020 தேதியன்று என் மகன் கொடுத்தார். நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் யாருடையது என்றால் என் மைத்துநருடையது ஆகும். அந்த இருசக்கர வாகனம் சம்மந்தப்பட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய ஓட்டுநர் உரிமத்தின் படி எனக்கு நான்கு சக்கர

வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்றும் இருசக்கர வாகனம் ஓட்ட உாிமம் இல்லை என்றால் சரிதான். எனக்கு அறுவை சிகிச்சை எதுவும் செய்யப்பட்டதா என்றால் இல்லை. எனக்கு இருசக்கர வாகனம் சரிவர ஓட்ட தெரியாது என்றும் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான உாிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டி சென்று நானே விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்ப்பட்ட காயங்கள் அனைத்தும் சரியாகிவிட்டது என்றும், வழக்கிற்காக அதிகபடியான நஷ்ட ஈடு கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**